**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – வரவு செலவு திட்ட நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – 2023 – 24ஆம் கல்வியாண்டில் 6 அரசு உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் மற்றும் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (ப.க.2(2) ) துறை**

**அரசாணை (நிலை) எண்.236**

**நாள் 13.12.2023**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**
**சோபகிருது வருடம், கார்த்திகை–27.**

படிக்கப்பட்டவை:–

1. பள்ளிக் கல்வி ஆணையர் / இயக்குநரின் கடித ந.க.எண். 018710/ டபிள்யு4/இ1/2021, நாள் 25.05.2022, 02.11.2022, 09.01.2023, 20.03.2023 மற்றும் 26.07.2023.
2. அரசாணை (நிலை) எண். 163 பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, நாள் 13.09.2023.

---------

**ஆணை :–**

2021–2022–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை திருத்த வரவு செலவு திட்ட நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறை தொடர்பான அறிவிப்புகளில் "22 பள்ளிகள் தரம் உயர்த்தப்படும்" என்ற அறிவிப்பும் ஒன்றாகும்.

2. நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2023–2024–ஆம் கல்வி ஆண்டில் 4 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திடக் கோரி பள்ளிக் கல்வி ஆணையர் / இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் அரசால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது, ஆய்வுக்குப் பின்னர், மேற்படி 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளுள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்த கீழ்கண்ட 6 உயர்நிலைப் பள்ளிகளை 2023–24ஆம்

கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பள்ளியின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | அரசு உயர்நிலைப் பள்ளி, கண்டிகை |
| 2. | புதுக்கோட்டை | அரசு உயர்நிலைப் பள்ளி, வேலாடிப்பட்டி |
| 3. | திருப்பத்தூர் | அரசு உயர்நிலைப் பள்ளி, பெரியாங்குப்பம் |
| 4. | திருவண்ணாமலை | அரசு உயர்நிலைப் பள்ளி, தச்சூர் |
| 5. | கிருஷ்ணகிரி | அரசு உயர்நிலைப் பள்ளி,அந்தேவனப் பள்ளி |
| 6. | தஞ்சாவூர் | அரசு உயர்நிலைப் பள்ளி,திப்பிராஜபுரம் |

(i). மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் மேற்படி 6 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.36,900–1,35,100(ஊதிய நிலை–18) என்ற ஊதிய நிலையில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை, ரூ.56,900–2,09,200 (நிலை–23) என்ற ஊதிய நிலையில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக தரம் (upgraded) உயர்த்திட அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தரம் உயர்த்தப்படுவதினால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் தொடர் உத்தேச செலவினத் தொகை ரூ.16,48,152/–( ரூபாய் பதினாறு இலட்சத்து நாற்பத்தி எட்டு ஆயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii). மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். மேற்படி 6 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு, ரூ.36,900–1,35,100 (நிலை–18) என்ற ஊதிய நிலையில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் (தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கு) பாடவாரியாக ஆக மொத்தம் 54 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (இவ்வரசாணையின் இணைப்பு–Iஇல் உள்ளவாறு) தோற்றுவிக்கப்படுகிறது. இவ்வாறு புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 54 பணியிடங்களுக்கு நிகரான

(EQUAL VALUE OF LIVE POST) 54 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (இவ்வரசாணையின் இணைப்பு- IIஇல் உள்ளவாறு) அரசுக்கு சரண் செய்யப்படுகிறது. மேலும் 6 அரசு உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படுவதனால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் தொடர் உத்தேச செலவினத் தொகை ரூ.6,55,97,040/-( ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஏழு ஆயிரத்து நாற்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

iii) இவ்வாறு தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறை / வழிமுறைகளின்படி நிரப்பிட வேண்டும்.

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுவோர் அப்பணியிடங்களுக்குரிய ஊதியம் மற்றும் ஏனைய படிகளை பெறத் தகுதியுடையவர்களாவர்.

4. பள்ளிகள் தரம் உயர்த்தப்படும் போது, 1:40 என்ற ஆசிரியர்-மாணவர் விகிதம் பின்பற்றப்படுதல், நடைமுறையில் உள்ள விதிமுறைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதி செய்ய வேண்டும். தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் கூடுதல் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உதவியை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை இப்பள்ளிகள் பூர்த்தி செய்வது குறித்து கண்காணிக்க சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு விரிவான ஆணைகளை வழங்கிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.-

i. <u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:-ரூ.16,48,152/-</u>

"2202-பொதுக்கல்வி- 02 இடைநிலைக் கல்வி- 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் - மாநிலச் செலவினங்கள் - AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்- 01 - சம்பளங்கள்.

(த.தொ.கு 2202-02-109 AA 30100)"

ii. **<u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:– ரூ.6,55,97,040/–</u>**

"2202–பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்–01– சம்பளங்கள்.

( த.தொ.கு.2202–02–109–AB–30100)"

6. மேலே பத்தி 3 (i) மற்றும் (ii)–இல் ஒப்பளிக்கப்படும் செலவினத்திற்கான நிதியொதுக்கம் ரூ.16,48,152/– + ரூ.6,55,97,040/– 2024–2025–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. புதிய மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தம் பள்ளியின் தலைமை அலுவலராக (Head of Office) கருதப்படுவர். அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர செலவிற்கான பட்டியல்களை சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள் / உதவிக் கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

8. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 316/ADS(GKT)/மைமஆபி/ நாள் 13.12.2023இல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (PSL No. 202312 PSL 0238).

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**ஜெ.குமாரகுருபரன்,**
**அரசுச் செயலாளர்.**

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 5/18/35/79.
சார்ந்த மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சார்ந்த மாவட்ட ஆட்சியர்கள்.
சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை– 9.

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை– 9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை– 9.
நிதித் (கல்வி–II / வ.செ.பொ.I / வ.செ.பொ.II / வ.வ.I / உள்கட்டமைப்பு–II / மை.ம.ஆ.பி ) துறை, சென்னை – 9.
பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக் கல்வித்(அநமு/வரவு–செலவு)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

பிரிவு அலுவலர்.
13/12/2023